**செ. கு. எண்: 092** **நாள்: 16.06.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 16.6.2018</u>

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், மகாராஜபுரம், மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அமல்ராஜ் என்பவரின் மனைவி திருமதி லூர்து, திரு. மாரியப்பன் என்பவரின் மனைவி திருமதி கருப்பாயி, திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் திரு. தங்கம், திரு. தங்கம் என்பவரின் மனைவி திருமதி சாந்தி மற்றும் திரு. பால்ராஜ் என்பவரின் மனைவி திருமதி மாரியம்மாள் ஆகியோர் சாலை விபத்தில் உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சிராஜ்தீன் என்பவரின் மகன் செல்வன் அன்சாத் என்பவர் பழம் வெட்ட முயன்றபொழுது தவறுதலாக காலில்பட்டு இரத்தப்போக்கு அதிகமாகி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஒகளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தண்டபாணி என்பவரின் மகன் செல்வன் சக்தி மற்றும் திரு. மகாராஜன் என்பவரின் மகன் செல்வன் சந்தோஷ் ஆகியோர் குளத்தில் குளிக்கும்போது சேற்றில் சிக்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஆறுகாட்டுத்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மகன் செல்வன் ரா. பிரவின்குமார், திரு. சிவானந்தம் என்பவரின் மகன் செல்வன் சி. பரத், திரு. அருள்ராஜ் என்பவரின் மகன் செல்வன் அ. யுகேந்திரன், திரு. பொன்னுதுரை என்பவரின் மகன் செல்வன் பொ. கனிஷ்கர் மற்றும் திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் செல்வன் சு. இராஜாமணி ஆகியோர் கடலில் படகில் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், தும்பல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆனந்தன் என்பவரின் மனைவி திருமதி ரத்தினச்செல்வி என்பவர் பாம்பு கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், செ.புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாஸ்கர் என்பவரின் மகன் திரு. ராஜேஸ் என்பவர் பாம்பு கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு சுரேஷ் என்பவரின் மகன் செல்வன் விக்னேஷ் என்பவர் ஜேடர்பாளையம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கோட்டுவீராம்பாளையம் கிராமம், பவானி ஆற்றில் குளிக்கச் சென்ற திரு. சலீம் என்பவரின் மனைவி திருமதி பர்வீன் மற்றும் மகள் ரஹமத்துன்னிஷா, திரு. அப்துல் ஜப்பார் என்பவரின் மகள் செல்வி பிர்தோஸ் மற்றும் திருமதி பத்ருன்னிஷா ஆகிய நான்கு நபர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **20** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **20** நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**